# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109450

1. District : மாவட்டம் Thiruvallur — PS: காவல்நிலையம் Vigilance & Anti-Corruption — Year: ஆண்டு 2023 — FIR No.: மு.த.அ. எண் 6/AC/2023/TVR — நாள் 24/05/2023 at 17.15 hrs.

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: U/s. 7.
   (iii) Act சட்டம்: — — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 03/05/2023 at about 11.00 hrs — Date to : நாள் வரை 18/5/2023 at about 11.30 hrs. at o/o. the VAO, padianallur.
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24/05/2023 — Time நேரம் : Between 1500 hrs and 16.15 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24/5/2023 — Time நேரம் : at 17.15 hrs.

Seen
[illegible]
25/05/2023

Seen
[signature]
25/5/23.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Oral statement was recorded as complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் East - about 38 kms
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Padianallur Village Administrative Officer, Ponneri Taluk, Thiruvallur District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் Thiruvallur Dt.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. M. Uma @ Uma Maheshwari — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் W/o. Munusamy (late)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 years — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Cooley — (g) Address : முகவரி No: 38, Amman koil Backside, Vyasarpadi, Chennai - 39.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Accused-1. Tr. Zahir Hussain, Village Administrative Officer, Padianallur Village
   Accused-2. Tr. Mani, Village Assistant, Padianallur Village, Ponneri Taluk, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — by the complainant —

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded bribe amount of Rs.5,000/- for making arrangements for complainant's husband death certificate.

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:- When I present at Thiruvallur vigilance Anti-Corruption Office on 24/05/2023 at 15.00hrs, one Complainant Tmt. M. Uma @ Uma Maheshwari Age-[illegible], W/o. Manusamy (late), No:38, Amman koil Back side, Vyasarpadi, Chennai-appeared before me and gave her oral statement as complaint against the Accused-1. Tr. Zahir Hussain, VAO, Padianallur and Accused-2 Tr. Mani, Village Assistant, Padianallur village, Ponneri Taluk, Thiruvallur District and the same oral statement was recorded by me as complaint, it as follows:-

(FIR content will follow in the separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...L.G. Tamizharasi... Inspector... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...VACB, TVL... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. உமா
LTI of Tmt. M. Uma @ Uma Maheswari

[signature] 24/5/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 25/5/2023 at 09.45hrs.

Name: பெயர் L.G. TAMIZHARASI
Rank: நிலை INSPECTOR OF POLICE, VACB, THIRUVALLUR. No. எண்

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.6/AC/2023/TVL, U/s. 7 of Prevention of Corruption Act – 1988 (as amended in 2018), continues......)**

திருமதி.மு.உமா @ உமா மகேஸ்வரி, வயது-42, க/பெ. முனுசாமி, எண்.38, அம்மன் கோயில் பின்புறம், வியாசர்பாடி, சென்னை-39 என்பவர் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 24.05.2023-ந்தேதி என் முன் ஆஜராகி கொடுத்த வாக்குமூலம். நான், சென்னை வியாசர்பாடியில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூர் கிராமத்தைச்சேர்ந்த கோவிந்தசாமி மகன் முனுசாமி என்பவரை நான் திருமணம் செய்துக்கொண்டேன். அவர் ஆட்டோ ஓட்டி வந்தார். எங்களுக்கு வினோதினி என்ற மகளும், சஞ்சய் என்ற மகனும் பிறந்தனர். என் கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி அடிக்கடி என்னிடம் தகராறு செய்து எனது மாமியார் வீட்டிற்கு சென்றுவிடுவார். அடிக்கடி வந்து எங்களை பார்த்துவிட்டு செல்வார். பின்னர் கடந்த 26.07.2021-ந்தேதி என் மாமியார் வீட்டிலிருந்து எனக்கு போன் வந்தது. என் கணவர் மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்துவிட்டதாகவும், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உடலை வைத்திருப்பதாக தெரிவித்தார்கள். பின்னர் நான் போலீசில் புகார் கொடுத்து. அதன்பேரில் போஸ்ட்மார்டம் செய்துதான் என் கணவரின் உடலை என்னிடம் ஒப்படைத்தார்கள். நான் அவரை நல்லமுறையில் அடக்கம் செய்தேன். பின்னர் நான் கூலி வேலை செய்து என் மகன் மற்றும் மகளை டிகிரி படிக்க வைத்தேன். என் மகளுக்கு திருமணம் செய்துவிட்டேன். எனது கணவரின் இறப்புச்சான்று எங்களுக்கு தேவைப்படுவதால். நான் சென்னை கலெக்டர் ஆபிசில் சென்று விசாரித்தபோது, என் கணவர் இறந்த இடத்திற்கு சென்று அந்த ஊர் வி.ஏ.ஓ-விடம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தார்கள். அதன்படி நான் கடந்த 03.05.2023-ந்தேதி காலை சுமார் 11.00 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்கா, பாடியநல்லூர் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோது, VAO திரு.ஜாகீர் உசேன் அவர்களை சந்திக்குமாறு தெரிவித்தார்கள். பின்னர் நான் VAO திரு.ஜாகீர் உசேன் அவர்களை, அவரது அலுவலகத்தில் சந்தித்து, என் கணவர் இறப்புச்சான்று வேண்டும் என்று தெரிவித்து, நான் எடுத்துச்சென்ற மனுவை அவரிடம் கொடுத்தேன். அதை VAO திரு.ஜாகீர் உசேன் வாங்கி படித்துவிட்டு, என்னிடம் சில ஆவணங்களின் நகல்களை கேட்டுப்பெற்றுக்கொண்டு, உனது கணவர் இறந்து 2 வருடங்கள் ஆகிவிட்டமையால், இறப்பு சான்று பெற அதிக பணம் செலவாகும் என்றும், எவ்வளவு பணம் என்று உதவியாளர் மணி வந்து சொல்லுவார் என்றும், என்னை அலுவலக வராண்டாவில் காத்திருக்கும்படி தெரிவித்தார். நான் அவர் தெரிவித்தபடி அவருடைய

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.6/AC/2023/TVL, U/s. 7 of Prevention of Corruption Act – 1988 (as amended in 2018), continues......)**

அலுவலக வராண்டாவில் காத்திருந்தபோது, அப்போது VAO-வின் உதவியாளர் திரு.மணி என்பவர் என்னிடம் வந்து, ரூ.10,000/-ம் கொடுத்தால் உன் கணவரின் இறப்புச்சான்று தந்துவிடுகிறோம் என்று தெரிவித்தார். நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று கூறினேன். அதற்கு மணி அவர்கள் அலுவலகத்திற்கு உள்ளே சென்று VAO -விடம் பேசிவிட்டு மீண்டும் என்னிடம் வந்து ரூ.6,000/-ம் கொடுத்தால் இறப்புச்சான்று பெற ஏற்பாடு செய்கிறோம் என்று தெரிவித்தார். நான் பணம் இல்லையென்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் எனக்கு சமையல் செய்யும்போது குக்கரால் அடிப்பட்டுவிட்டதால், என்னால் VAO அலுவலகத்திற்கு செல்ல முடியவில்லை. பின்னர், நான் கடந்த 18.05.2023-ந்தேதி காலை சுமார் 11.30 மணிக்கு மீண்டும் பாடியநல்லூர் VAO அலுவலகத்திற்கு சென்றபோது, அங்கு VAO ஜாகிர் உசேனும், அவர் எதிரில் அவரது உதவியாளர் மணியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். என்னைப்பார்த்ததும், VAO வாம்மா எங்க ஆளைக்காணோம் என்று கேட்டார். நான் சமையல் செய்யும்போது குக்கர் வெடித்து காயமடைந்ததால் வரமுடியவில்லை என்று தெரிவித்துவிட்டு, என் கணவரின் இறப்புச்சான்று குறித்து கேட்டேன். அதற்கு VAO திரு.ஜாகீர் உசேன் நான் கேட்ட பணம் ரூ.6,000/-த்தை கொண்டுவந்துள்ளாயா என்று கேட்டார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என்று கூறினேன். அதற்கு அவர் சிறிது யோசித்துவிட்டு, சரி ரூ.5,000/-ஐ கொண்டுவந்து கொடுத்துவிட்டு உன் கணவரின் இறப்புச்சான்றினை பெற்றுக்கொள் என்று தெரிவித்தார். அப்போது அருகில் இருந்த அவரது உதவியாளர் திரு.மணி அவர்களும் இதற்கு மேல் பணம் குறைக்க முடியாது. VAO கேட்ட பணத்தை கொண்டுவந்து கொடுத்துவிட்டு வேலையை முடித்துக்கொண்டு போ என்று தெரிவித்தார். நான் பணம் இல்லை என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். என் கணவரின் இறப்புச்சான்று பெற கடந்த 2 ஆண்டுகளாக அலைந்தமையால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. என் நிலைமைத்தெரிந்தும், என் கணவர் இறப்புச்சான்று தருவதற்கு என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.5,000/-ஐ கேட்ட பாடியநல்லூர் VAO ஜாகிர் உசேன் மற்றும் அவரது உதவியாளர் மணி ஆகியோர்களுக்கு கொடுக்க விருப்பம் இல்லாததால், அவர்கள் இருவரின் மீதும் நடவடிக்கை எடுக்க, அவர் கேட்ட லஞ்ச பணம் ரூ.5,000/-ஐ ஏற்பாடு செய்ததற்கு கால தாமதமாகிவிட்டது. எனவே அவர்கள் இருவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/- உடன் வந்து தங்களைப்பார்த்தேன். மேலும் தாங்கள் எடுக்கும் சட்டப்படியான

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.6/AC/2023/TVL, U/s. 7 of Prevention of Corruption Act – 1988 (as amended in 2018), continues......)**

நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன். எனக்கு எழுத, படிக்க தெரியாததால், என்னை விசாரணை செய்து நான் கூறிய விவரத்தை வாக்குமூலமாக கணிணியில் பதிவு செய்தீர்கள். பின்னர் நான் கொடுத்த வாக்குமூலத்தை என்னிடம் படித்துக்காட்டினீர்கள். நான் சொன்னபடி சரியாக இருந்ததமையால், நான் புகாராக கொடுத்த இந்த வாக்குமூலத்தில் கையொப்பம் மற்றும் கைரேகை வைத்தேன். **SdXXX** (உமா ஜ இடது கைபெருவிரல் ரேகை). **Sir, The above oral statement of complainant was recorded by me. SdXXX(G.S.Tamizharasi),** 24.05.2023.

**Honoured Sir,**

I enquired and recorded the oral statement of the complainant as complaint on 24.05.2023 between 15.00 hrs and 16.15 hrs and after getting proper permission from DVAC on the Statement, a preliminary enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the preliminary enquiry, enmity, genuineness of the Statement (complaint) and the reputation of the both accused are verified. Since, there is prima-facie made out to register a FIR on said Statement against the Accused-1 Tr.Zahir Hussain, Village Administrative Officer, Padianallur Village and Accused-2 Tr.Mani, Village Assistant, O/o. the Padianallur VAO, Ponneri Taluk, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.6/AC/2023/TVL u/s. 7 of The Prevention of Corruption Act-1988 (as amended in 2018) on today 24.05.2023 at about 17.15 hrs and took-up action.

24/5/2023

(G.S.TAMIZHARASI),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.

INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.